## கொன்னூர் சாலைக் குடிசைப் பகுதியை அகற்றும் அரசின் முயற்சி - சுருக்கவடிவிலான அறிக்கை

கொன்னூர் சாலை குடிசைப் பகுதியில் தற்போது சுமார் 1000 வீடுகளும் 200 சிறு வியாபார கடைகளும் உள்ளன. இந்த குடிசை பகுதி கொன்னூர் சாலையை ஒட்டி 700 மீட்டர் நீளத்திற்கு அமைந்துள்ளது. மேலும் இந்த குடிசைப் பகுதியானது தமிழ் நாடு குடிசை மாற்று வாரியத்தால், தமிழ் நாடு குடிசை பகுதி (மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குமுறை படுத்துதல்) சட்டத்தின் கீழ் 1971 இல் அறிவிக்கப்பட்ட குடிசைப்பகுதியாகும். ஒரு அறிவிக்கப்பட்ட குடிசை பகுதியாக அரசால் அங்கீகரிக்கபட்ட போதும் பல முறை இந்த குடிசை பகுதியை அகற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த குடிசையின் ஒரு பகுதியின் கீழ் ஒரு கால்வாய் ஓடுவதை காரணம் காட்டியும் மேலும் கொன்னூர் சாலை விரிவாக்கம் என்ற பெயரிலும் பல முறை இந்த குடிசை பகுதி அகற்றலுக்குள்ளானது. 1984 இல் சென்னை மாநகராட்சி ஆட்சேபணைக்குரிய இடம் என்று கூறி ஒட்டு மொத்தமாக இந்த குடிசை பகுதியை தரை மட்டமாக்கியது. அப்போது சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த ஒரு இடைக்கால தடை உத்தரவு மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் அங்கு குடியேறினார்கள். மேலும் 2011 இல் கொன்னூர் சாலை விரிவாக்கம் என்று கூறி இந்த குடிசை பகுதியின் ஒரு பகுதி அகற்றம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நவம்பர் 2014 இலும் கொன்னூர் சாலை குடிசை பகுதி மக்களை வெளியேற்றும் முயற்சியை அரசு மேற்கொண்டது. இந்த குடிசை பகுதியை அகற்றும் இந்த முயற்சியில் அரசு கையாண்ட முறை மற்றும் குடிசைவாழ் மக்கள் சந்தித்த உரிமை மீறல்கள் பற்றி CAG செய்த உண்மை நிலை ஆய்வின் அறிக்கை சுருக்கவடிவில் இங்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இதில் கொன்னூர் சாலை குடிசை பகுதியிலும் அதன் சுற்றுப்புறத்திலும் மக்கள் தற்போது அனுபவித்துவரும் வசதிகள் குறித்த ஆய்வின் முடிவுகளும் வழங்கப்பட்டுள்ளது (இதை எழில் நகர் குடியிருப்பு பகுதியின் வசதிகள் குறித்து CAG நடத்திய உண்மை நிலை ஆய்வறிக்கையுடன் ஒப்பிட்டு பார்க்கலாம்)

### குடிசை பகுதி அகற்றம் குறித்து

குடிசை பகுதியை அகற்றுவது பற்றியோ மக்களை மறுகுடியமர்வு செய்வது குறித்தோ எந்த  ஒரு அறிவிப்போ தகவலோ கொன்னூர் சாலை மக்களுக்கு மாநகராட்சியால் அளிக்கப்படவில்லை. 10 நவம்பர் 2014 திங்கள் அன்று காலையில் மாநகராட்சி அதிகாரிகள் போலீஸ் துணையுடன் கொன்னூர் சாலை குடிசை பகுதியை அகற்றம் செய்ய வந்தனர். நாங்கள் நேர்காணல் செய்த ஒரு ஆட்டோ ஓட்டுனர் அந்த நிகழ்வு பற்றி பின்வருமாறு கூறினார், "குடிசைகள் இடிக்கப்பட்ட நாள் அன்று அதிகாரிகள் போலீசுடன் வீடு வீடாக சென்று மக்களிடம் தனி தனியாக பேசினார்கள். மக்களிடம் அவர்கள், ஒருவேளை குடிசைகளை காலி செய்ய மறுத்துவிட்டால் மருகுடிமர்வு இல்லாமல் பகுதிகளை அகற்றிவிடுவோம் என்று கூறினார்கள். அதிகாரிகள் கொடுத்த இந்த அழுத்தத்திற்கு பணிந்து சிலர் டோக்கன்களை பெற்றுக்கொண்டு வீடுகளை விட்டு வெளியேறினர். அதன் பிறகு மாநகராட்சி பின்பற்றும் முறைப்படி இடிக்கப்பட்ட குடிசைகளில் வாழ்ந்த மக்களையும் அவர்களது உடமைகளையும் மாநகராட்சி குப்பையேற்றும் வாகனத்தில் ஏற்றி எழில் நகர் குடியிருப்பிற்கு கொண்டு சென்றனர். வீடுகளை இடிப்பதற்கும் மருகுடியமர்வுக்கும் ஒத்துழைப்பு அளிக்காதவர்களின் வீடுகள் இடிக்கப்படவில்லை. அவர்களுக்கு டோக்கன்களும் வழங்கப்படவில்லை”.

இந்த குடிசை பகுதி அகற்றமும் மறுகுடியமர்வும் மக்களின் மீது திணிக்கப்பட்டது. அது மட்டுமின்றி மக்களை மாற்று குடியிருப்புகளுக்கு கொண்டு சென்ற பிறகு தான் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு எண் பெறுவதற்கு அவர்கள் தலா ரூ. 25000 செலுத்த வேண்டும் என்ற தகவல் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மறுகுடியமர்வால் மக்களுக்கு ஏற்படும் பொருளாதார தாக்கம் குறித்து எந்த ஆய்வும் நடத்தப்படவுமில்லை. வாழ்வாதார இழப்பு மற்றும் வருமான இழப்புகளுக்கு எந்த இழப்பீடும் வழங்கப்படவில்லை. இவ்வாறாக மொத்தம் 75 வீடுகள் இடிக்கப்பட்டு அதில் வசித்த குடும்பங்கள் ஒக்கியம் துரைப்பாக்கம் அருகில் கட்டப்பட்டுள்ள எழில் நகர் குடியிருப்புகளுக்கு மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**குடிசை பகுதி அகற்றதிற்கான காரணம் தெளிவு இல்லாமை**

இப்பொழுதும் கொன்னூர் சாலை குடிசை பகுதி மக்களுக்கு தங்களது மொத்த குடிசை பகுதியும் அகற்றப்படுமா அல்லது குறிப்பிட்ட ஒரு பகுதி மட்டும் அகற்றப்படுமா என்ற தெளிவு இல்லாததால் ஒரு பதற்றம் நிலவுகிறது. குடிசை பகுதியை எதற்காக அரசு அகற்ற நினைக்கிறது என்ற காரணமும் மக்களுக்கு புலப்படவில்லை. நாங்கள் நேர்காணல் செய்தவர்கள் வெவ்வேறு காரணங்களை தெரிவித்தனர். சிலர் மழை நீர் கால்வாய் அமைப்பதற்காக இந்த குடிசைகள் அகற்றபடுவதாகவும், வேறு சிலர் ஏற்கனவே உள்ள கால்வாயை தூர் வாருவதற்காக செய்யப்படுவதாகவும் மேலும் சிலர் கொன்னூர் சாலையை விரிவு படுத்துவதற்காக இந்த குடிசை பகுதி அகற்றப்படுகிறது என்று தெரிவித்தனர். இந்த பகுதியை சேர்ந்த சிலர் இந்த குடிசை பகுதி ஆட்சேபணைக்குரிய இடத்தில் அமைந்துள்ளதால் இது அகற்றப்படுகிறது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக கூறியுள்ளனர். ஆயினும் இந்த இடம் எதனால் ஆட்சேபணைக்குரிய இடமாகிறது என்று தெளிவாக புலப்படவில்லை.

**முக்கிய உட்கட்டமைப்பு வசதிகள்**

கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரத்தின்படி, மாநகரின் மையப்பகுதியில் வசிப்பதால் கொன்னூர் சாலை குடிசை பகுதி மக்களுக்கு எல்லா முக்கிய வசதிகளும் நடக்கும் தூரத்திளேயே அமைந்திருக்கிறது. ஒப்பிட்டு பார்த்தால் எழில் நகர் மற்றும் கண்ணகி நகரில் இவ்வாரான வசதிகள் மிகவும் குறைவு.

| | | |
|---|---|---|
| 1. | அங்கன்வாடிகள் | 3 அங்கன்வாடிகள் அருகில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் செயல்பட்டு வருகிறது. இவை குடிசைப்பகுதியிலிருந்து 300 மி தூரத்தில் உள்ளன |
| 2. | பள்ளிகள் | 2 மாநகராட்சி பள்ளிகள் (1 தொடக்க பள்ளி, 1 மேல் நிலை பள்ளி) குடிசைப்பகுதியிலிருந்து 300 மி தூரத்தில் செயல்பட்டு வருகின்றன. மேலும் 3 தனியார் பள்ளிகளும், 1 அரசு உதவி பெரும் பள்ளியும் 1 கிமி சுற்று வட்டத்தில் செயல்பட்டு வருகின்றன |

| | | |
|---|---|---|
| 3. | சுகாதார வசதிகள் (அரசு) | 1 ஆரம்ப சுகாதார மையம், 1 சமூக நலக்கூடம், 1 அரசு காச நோய் மருத்துவமனை ஆகியவை குடிசைப் பகுதியிலிருந்து 500மீ தூரத்தில் அமைந்துள்ளது |
| 4. | சுகாதார வசதிகள் (தனியார்) | 3 தனியார் மருத்துவமனைகள், 3 தனியார் கிளினிக்குகள் குடிசைப்பகுதியிலிருந்து 1கிமீ தூரத்தில் அமைந்துள்ளது |
| 5. | போக்குவரத்து | • கோயம்பேடு, பிராட்வே, ஐ.சி.எப் போன்ற முக்கிய இடங்களுக்கு பேருந்து வசதிகள் உண்டு<br>• குடிசைப்பகுதிக்கு அருகில் 2 பேருந்து நிறுத்தங்கள் உள்ளன. அயனாவரம் பேருந்து முனையமும் மிக அருகில் உள்ளது<br>• பெரம்பூர் ரயில் நிலையம் 3.5 கிமீ தூரத்தில் உள்ளது<br>• சென்னை சென்ட்ரல் மற்றும் எழும்பூர் ரயில் முனையங்கள் 5.9 கிமீ மற்றும் 6.5 கிமீ தூரத்தில் அமைந்துள்ளன<br>இந்த முக்கிய இடங்களுக்கெல்லாம் பேருந்து மற்றும் ஷேர் ஆட்டோக்கள் சேவை சிறப்பாக உள்ளது |
| 6. | நியாய விலை கடை | கொன்னூர் சாலையில் குடிசை பகுதிக்கு மிக அருகாமையில் 1 நியாயவிலை கடை அமைந்துள்ளது |

**வாழ்வாதாரம்**

கொன்னூர் சாலை மக்கள் பெரும்பாலும் பூ வியாபாரம், வீட்டு வேலை, காய் கறி வியாபாரம், கட்டிட வேலை, பெட்டி கடைகள், சிறு உணவகங்கள், ஆட்டோ, ரிக்ஷா ஓட்டுனர்கள், பெயிண்டிங் போன்ற தொழில்களை செய்து வருகிறார்கள். ஆட்டோ ஓட்டுனர்கள் தவிர்த்து மற்ற தொழில்கள் செய்யும் எல்லா மக்களுக்கும் அவர்கள் வேலைக்கு செல்லும் இடங்கள் 3 முதல் 5 கிமீ தூரத்திற்குள்ளேயே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**மறுகுடியமர்வுக்கு மாற்றாக**

கொன்னூர் சாலை குடிசைப்பகுதி அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையிலேயே நிறைய காலி இடங்கள்/பயன்படுத்தபடாத இடங்கள் உள்ளன - இந்த இடங்கள் இவர்கள் தற்போது வேலை செய்யும் மற்றும் பள்ளிக்கு செல்லும் இடங்களுக்கு அருகிலேயே உள்ளன. எங்களின் உண்மை அறியும் குழு இது போன்ற 5 காலி/பயன்படாமல் உள்ள இடங்களை கண்டறிந்துள்ளது. இதில் ஒரு இடம் அரசால் தனியார் நிறுவனத்துக்கு குத்தகைக்கு விடப்பட்டு இப்போது பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. மேலும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான ஒரு இடமும் இந்த குடிசை பகுதிக்கு அருகில் உள்ளது. மேலும் இந்த குடிசை பகுதிக்கு மிக அருகில் அரசின் வருவாய் துறைக்கு சொந்தமான இடம் உள்ளது, அதை அருகில் உள்ள பள்ளி பயன்படுத்தி வருகிறது. இந்த இடங்களில் சில வாகனங்கள் நிறுத்தும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது